Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month
Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17
Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14
வேணு : 20 ஜனவரி 2015 கானம் : 6




டிச 19- தெய்வத்தமிழ் இசை விழா துவக்கம் - மஹோதயா ஹால், சென்னை

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளீ

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 20 | ஜனவரி 2015 | கானம் : 6

Delivered by India Post
www.indiapost.gov.in

PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI




டிசம்பர் 5- சென்னை
மந்தைவெளி சிருங்கேரி மடம்
- ஸ்ரீநாராயணதீர்த்தரின்
பஜனை மேளாவில்



டிசம்பர் 7 - சென்னை
மயிலாப்பூர் பி.எஸ்.உயர்
நிலைப்பள்ளி -
ஸ்ரீமூகபஞ்சசதீ ஸ்லோக
தமிழ் விளக்கவுரை நூல்
வெளியீடு




டிசம்பர் 18 - வைதீகஸ்ரீ
சார்பாக காஞ்சி
மஹாஸ்வாமிகளுக்கு
ச்ரத்தாஞ்சலி
அயோத்யா மண்டபம்
மேற்கு மாம்பலம்



டிச 11 - திருப்பூர் ஸ்ரீவீரராகவ பெருமாள் கோவிலில்



டிச 21- ஹனுமத் ஜெயந்தி மதுரபுரி ஆஸ்ரமம்
கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான் சன்னதி

PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI








டிசம்பர் மாதம் அமெரிக்காவில் ராமானுஜம்ஜி முன்னிலையில் சத்சங்கங்கள்
– ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் - "ராதே ராதே" சிறப்பு நாட்டிய நாடகம்

நவ 25 –டிச 9 – மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை
தூத்துக்குடி, கோவில்பட்டி, திருநெல்வேலி, நாகர்கோவில், அம்பாசமுத்திரம்
– முரளிஜி













டிசம்பர் 13-15 திருப்பூந்துருத்தி ஸ்ரீநாராயணதீர்த்தரின் அதிஷ்டானத்தில்
ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணீ மஹோத்ஸவம்

டிச 18 அன்று நம் ஸ்ரீசாந்தீபனி குருகுல பாடசாலையில் யஜுர்வேத கனபாடம் பயிலும் வித்யார்த்தியினருக்கு ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் பாடம் பூர்த்தியானது.
ஸ்ரீஸ்வாமிஜி அருகில் பாடசாலை கனவாத்யார் ப்ரும்மஸ்ரீ சேதுராம கனபாடிகள்





PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI



டிசம்பர் 6 – ஞானஜோதி ஆடிட்டோரியம், பெங்களூரு பல்கலைக்கழகம்
மற்றும் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாக ஸீதாராம ஹாலிலும்
G.O.D பெங்களூரு சார்பாக மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை







PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 ஜனவரி 2015 கானம்: 6

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-226 | 03 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 |
| பாகவத பழம்- ஸ்க 2/20 | 07 |
| சத்சங்கம் | 12 |
| தெய்வத்தமிழ் இசைவிழா<br>கோபகுடீரம் ஆண்டு விழா | 16 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 22 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 24 |
| ப்ருந்தாவன கண்ணன் | 29 |
| மாலே மணிவண்ணா | 31 |
| ஸ்ரீமஹாபெரியவாள் கருணை | 33 |


நம்முடைய மதத்தில், சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு காது குத்தி, அதில் ஒரு அழகான தங்க ஆபரணமும் அணிவது வழக்கமாக உள்ளது. மற்ற அங்கங்களுக்கு, ஆபரணங்கள் நாமாக அணிந்து கொள்ளலாமே தவிர அது கட்டாயம் கிடையாது. காதுகளுக்கு மட்டும், கட்டாயமாக விதிக்கப்பட்டுள்ளது. ஏன்? அந்த காதுகளினால்தான் அவன், பகவன் நாமாவும், பகவத் குணமும் கேட்டு, தன்னுடைய மனித பிறவியை, பயனுள்ளதாக செய்து கொள்ள போகின்றான். அதனால்தான் காதுகளுக்கு ஆபரணம் அணிவிக்கச் சொல்லி உள்ளது.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**"MADHURAMURALI" WISHES ITS READERS,**
**HAPPY, PROSPEROUS & SATSANG FILLED NEW YEAR 2015**

PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

## ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ஆபேரி　　　　　　　　　　தாளம்: ஆதி

சொல்லித்தான் பாரேன் ஹரி நாமத்தை
அது அள்ளித்தரும் அருளை　　　(சொல்லித்தான் ..)

பள்ளியில் ஓதி வந்த சிறுவனை
பாகவத அரசனாக முடிசூட்டியது　　(சொல்லித்தான் ..)

ஆனைக்கும் அன்று துணையாக வந்தது
மனை தோறும் ஒலிக்க மங்களம் தருவது
(சொல்லித்தான் ..)

வினைகளையெல்லாம் வேரறுக்க வல்லது
நினைத்த மாத்திரத்தில் துணையாக வருவது
(சொல்லித்தான் ..)

பின் அட்டை: 8ஆம் ஆண்டு தெய்வத்தமிழ் இசை விழா, துவக்கம், திரு.ப.தனபால் எம்.ஏ.பி.ஏல், ஆணையர் - இந்து சமய அறநிலைய ஆட்சி துறை மற்றும் நீதியரசர் திரு.அருணாசலம், ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் திருவண்ணாமலை உடன் திரு.ஸ்ரீனிவாசன் குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன் அறங்காவலர் மற்றும் டாக்டர்.ஆ.பாக்யநாதன், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர் - டிச 19-25, 2014 மஹோதயா ஹால், அசோக் நகர், சென்னை





PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# மதுரமான
# மஹனீயர் – 226

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

ஹைதராபாத்தில் யஜுர்வேத பதம் பயின்று வந்த ஸ்ரீஅனுபிண்டி சுப்ரமண்யம், ஒருமுறை விஜயவாடாவில் பரீக்ஷாதிகாரியாக சென்றிருந்த ஸ்ரீமல்லிகார்ஜுன ஸோமயாஜி முன்பு நன்கு பரீக்ஷை தந்தார். அப்பொழுது ஸ்ரீஸோமயாஜி அவரை பார்த்து, "சென்னையில் ஸ்ரீகுருஜி அவர்களின் பாடசாலைக்கு வருகிறாயா" என்று கேட்டார். சரி என்ற அவர், ஸ்ரீகுருஜியின் உத்திரவு பெறுவதற்காக, பெங்களூருக்கு 2003இல் சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் நடைபெறும் சமயம் சென்றார். அப்பொழுது குருஜி என்ன உத்திரவு தருவார் என்று தெரியாததால், துணிமணி கூட எதுவும் எடுத்து கொள்ளாமல் வந்தார் ஸ்ரீசுப்ரமண்யம். வந்த அவரை பார்த்து, குருஜி ஒரு பஞ்சாதியை சொல்ல சொன்னார். அதை அனுபிண்டி சொன்ன உடனேயே, "இப்படியே வாத்யார் ஸ்ரீஸோமயாஜியுடன் சென்னை பாடசாலைக்கு சென்று விடலாம். என்ன தேவையோ அதை எல்லாம், பாடசாலையிலேயே பெற்றுக்கொள்ளலாம்" என்று சொல்லி விட்டார் ஸ்ரீகுருஜி. அப்படி நம் பாடசாலைக்கு வந்து, இன்று வாத்யாராக இருப்பவர்தான் ப்ரும்மஸ்ரீ அனுபிண்டி கனபாடிகள்.

பாடசாலையில் சேர்ந்த மறு வருடம், அனுபிண்டியுடன் 4வித்யார்த்திகள் பரீக்ஷைக்கு ஒருமுறை செல்வதாக இருந்தது. அச்சமயம் ஒரு functionஉம் வந்து விட்டதால், யாராலும் போக முடியாத சூழ்நிலை. பிண்டிக்கு பரீஷைக்கு போக மிகவும் ஆசையாக இருந்தது. வாத்யாரிடம் சொன்னால், அவரோ, "எல்லோரும் பரீக்ஷைக்கு போகாதபொழுது, நீ மட்டும் எப்படி போகலாம். இருந்தாலும் ஒரு வழி சொல்கிறேன் கேள். ஸ்ரீகுருஜியிடம் என்னை பத்து நாள் ஊரில் கூப்பிடுகிறார்கள்; போய் வருகிறேன் என்று சொல்லி விட்டு போ" என்றார். குருஜியிடம் சொல்ல போகையில், அவரிடம் எப்படி பொய் சொல்லி விட்டு செல்வது என அனுபிண்டிக்கு மனம் தடுமாறியது. ஸ்ரீகுருஜி, அதற்கு பெரிய இடமே தரவில்லை. நமஸ்கரித்து, ஊருக்கு போய் வருகிறேன் என்றவுடனேயே



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

"பரீக்ஷைக்கு போய் வருகிறாயா? நல்லது. மிக நன்றாக செய்வாய்" என்று சொல்லி அருளினார். அதை கேட்ட பிண்டிக்கு, தூக்கி வாரி போட்டது. குருஜிக்கு சொல்லாமலேயே எல்லாம் தெரியும் என்றாலும், அதையும் அவர் காண்பித்து கொள்ளாமலேயே சொன்னது, அதிலும் ஆச்சரியமாக இருந்தது. மேலும் ஸ்ரீகுருஜி சொன்னது போலவே, அந்த பரீக்ஷையில் எதிர்பார்த்ததை விடவும் மேலாக, நன்றாக முதற் வகுப்பில் தேறினார்.

இவர் தந்தையும் தாயும், ஹைதராபாத்தில், இவர் தம் தமையனாருடன் வசித்து வருகின்றனர். தந்தை ஒருமுறை ஹைதராபாத்தில் வீடு வாங்க ஆசைப்பட்டார். கையிலிருந்த பணத்தை வைத்து, முன் பணம் செலுத்தி Registerஉம் செய்து விட்டார். ஆனால், மீதி பணம் தர முடியவில்லை. எந்த வங்கியும் அவருக்கு கடன் கொடுக்கவில்லை. பிண்டியும் நாலு வங்கி ஏறி இறங்கியதுதான் மிச்சம். லோன் கிடைக்காததால், தந்தை register செய்த பத்திரத்தை cancel செய்வதாக, பிண்டிக்கு போன் போட்டு சொன்னார். அதை கேட்டதிலிருந்து பிண்டிக்கு மிகுந்த மனவருத்தம்; மீண்டும் ஒருமுறை வங்கிக்கு சென்றார். அதே ஏமாற்றம்; அப்படியே ப்ரேமிகபவனம் வந்தார் பிண்டி. என்ன செய்வது என்று தெரியாமல், தவித்து நின்று கொண்டிருந்தார். குருஜிக்கு இந்த விஷயங்களெல்லாம் தெரியாது. பிண்டியை தனியே அழைத்த குருஜி, முதல் வார்த்தையாக, "என்ன பிண்டி லோன் கிடைக்கவில்லையா? ஏன் கவலைப்படுகிறாய்? எல்லாம் சரியாகி விடும்" என்றார். அதை கேட்ட பிண்டி கண்களில், ஜலம் வழிந்தோடியது. ஆச்சரியமாக மறுநாளே, அந்த கஷ்டத்திற்கு ஒரு விடிவு பிறந்து, பிண்டியின் தந்தையால், வீடும் வாங்க முடிந்தது!!

2012இல் பிண்டிக்கு கையில் அடிபட்டதிலிருந்து முன்போல், ஸ்ரீகுருஜியின் கைங்கரியங்களுக்கு, அவரால் செல்ல முடியாமல் இருந்தது. சென்ற மாதம் இதை பற்றி சக வாத்யார்களிடம் சொல்லி, "இனி குருஜிக்கு கைங்கரியம் செய்ய வாய்ப்பே கிடைக்காதோ" என்று சொல்லி வருத்தப்பட்டார். இதுபற்றி குருஜியிடம் எதையும் தெரிவிக்காமலேயே, அன்று மதியமே குருஜியிடம் இருந்து, கைங்கரியம் செய்ய அழைப்பு வந்து விட்டது. பிண்டி அதை சொல்லி சொல்லி



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

சந்தோஷப்பட்டார். 2006 ஜூன் மாதம், ப்ரும்மஸ்ரீ பிண்டி சுப்ரமண்ய கனபாடிகளை, பாடசாலையில் வாத்யாராக இருக்க சொல்லி ஸ்ரீகுருஜி சொன்னார். அன்றிலிருந்து, அதை தம் பாக்யமாக கருதி, பாடசாலை வாத்யாராக இருந்து வருகிறார் பிண்டி.


ஆஸ்ரமத்தில் குருஜி ஜபம் செய்யும்பொழுதெல்லாம், தாமும் கூட இருந்து, ஜபம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார் பிண்டி. ஒருசமயம் ஸ்ரீகுருஜி, இரவுபகலாக 18மணி நேரம் கூட ஜபம் செய்வதை பார்த்த பிண்டிக்கு, "இங்குதான் எப்பொழுதும் நாமா நடக்கிறது. குருஜிக்கு தேவை என ஒன்றும் இல்லையே? ஏன் இப்படி படு தீவிரமாக குருஜி ஜபமும் தியானமும் செய்கிறார்" என்று எண்ணி இருக்கிறார். நாலைந்து நாள் அப்படியே நினைக்க, குருஜி அவரை கூப்பிட்டு, "எனக்கு தேவை என்று ஒன்றும் இல்லை. நான் ஜபம் நிறைய செய்வதும், இங்கு நிறைய நாமா நடப்பதும் இங்கு வருபவர்களின் நன்மைக்காகத்தான். அவர்கள் ஆஸ்ரமத்திற்கு வந்து என்ன வேண்டினாலும் கிடைக்கும். அவர்களுக்கு என்ன குறை இருந்தாலும், நீங்கி விடும். அதற்குத்தான் இது எல்லாம்" என்றார்!

சிறிதளவு ஜபம், தியானம் என்று ஈடுபட ஆரம்பித்து விட்டாலோ, அல்லது பிரவசனம், நாமகீர்த்தனம் செய்ய ஆரம்பித்து விட்டாலோ, தான் ஏதோ தெய்வத்தின் அம்சமாக இருக்குமோ என்ற ஒரு எண்ணம் தலை தூக்க ஆரம்பிக்கும். அதனால், இவர்கள் நாடிஜோதிடம், அருள்வாக்கு, சித்தபுருஷர்களை அணுகி "நான் யார், நான் யார்" என்று கேள்வி கேட்பார்கள். இதை விடுத்து தனக்குள்ளேயே, இந்த கேள்வி எழும்புவது யாருக்கு?, எனக்கு என்றால், "நான் யார்" என்று விசாரம் செய்ய ஆரம்பித்தால், நான் சரீரம் இல்லை, பிராணன் இல்லை, அறிவு இல்லை, மனசு இல்லை, அழியாத ஆத்மஸ்வரூபம் என்பது புலப்படும். நான் யார் என்று பிறரை கேட்பதை விடுத்து, தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: ஹிரண்யகசிபுவை மட்டும் அசுரர்களில் மிகவும் பொல்லாதவனாக புராணங்கள் கூறுவதற்கான காரணம் என்ன?

பதில்: ஹிரண்யகசிபு ப்ரும்மாவை நோக்கி தவம் செய்து அவரிடம் இருந்து ஒரு வரம் பெற்றான். அந்த வரம் எது? தனக்கு எதனாலும் மரணம் ஏற்படக்கூடாது என்பதே அது! தீயினால் கூடாது; நீரினால் கூடாது; மேலே கூடாது; கீழே கூடாது; இப்படியாக ... வரம் கேட்கின்றான். இதனுடைய சாரம் என்ன? தன்னுடைய சரீரத்திற்கு எப்பொழுதும் யாராலும் அழிவு வரக்கூடாது என்பதே அது! அப்படி அவன் கேட்டதற்கு காரணம் என்ன? சரீரம் "நான்" என்று அவன் நினைப்பதே காரணம். அவன் எந்த வரத்தையெல்லாம் ஆத்மாவிற்காக கேட்கிறானோ, அது ஆத்மாவிற்கு இயல்பாகவே இருக்கக் கூடியது. ஆத்மாவிற்கு எப்பொழுதும் எதனாலும் எங்கும் அழிவு கிடையாது என்பதே உண்மை. தன்னை சரீரம் என்று நினைத்து கொள்வதுதான் அசுரகுணம். அது ஹிரண்யகசிபுவிடம் அதிகமாகவே இருக்கின்றது.

கேள்வி: போகி என்ற பண்டிகையை கொண்டாடுகின்றோம். போகி என்றால் என்ன பொருள்?

பதில்: எப்பொழுதும் பகவானுடைய தியானத்தில் யோகம் செய்பவன் யோகி. எப்பொழுதும் வியாதியுடன் வாழ்ந்து கொண்டிருப்பவன் ரோகி. ஆட்டம், பாட்டம் போன்ற கேளிக்கைகள் மற்றும் ஸர்வ வசதிகளுடன் வாழ்பவன் அதாவது, போகங்களை குறைவில்லாமல் எப்பொழுதும் அனுபவித்து கொண்டிருப்பவன் போகி. இந்திரன்தான் ஸ்வர்க்கத்திற்கு அதிபதி. அவன்தான் சிறந்த போகி. அவன்தான் மழைக்கு அதிபதியும் கூட. மார்கழி கடைசி நாள் மழைக்கு நன்றி தெரிவித்து, இந்திரனையே வழிபடுகின்றோம். அது இந்திர விழா. அதனால் அந்த பண்டிகைக்கு போகி என்று பெயர்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI



# பாகவத பழம்

**ஸ்கந்தம் 2, அத்யாயம் 6**

–ஸ்ரீ ஸ்வாமிஜி (20)



பிரம்மா நாரதரிடம் தொடர்ந்து கூறுகிறார். (சென்ற இதழ் தொடர்ச்சி...) நான் வேதஸ்வரூபியும், தபோரூபியும், பிரஜாபதிகளுக்கு தந்தையுமாக இருந்து சிறந்த யோகத்தால் ஒருமுகப்பட்ட மனதை கொண்டவனாக இருந்தபோதிலும், அந்த பரமாத்மாவை அறியவில்லை. ஆகாசம் தனது முடிவை அறியாததுபோல், அந்த பரமாத்மாவே தனது மாயையின் எல்லையையும், விஸ்தாரத்தையும் அறியவில்லை. அப்படி இருக்கும்போது, மற்றவர்கள் அதை எப்படி அறிய முடியும்? தன்னை அண்டியவர்களுடைய ஸம்ஸாரத்தை அழிப்பவரும், சகல க்ஷேமங்களுக்கும் இருப்பிடமான அந்த பகவானின் மிக மங்களமான திருவடிகளை நான் வணங்குகிறேன்.

எவருடைய உண்மையான ரூபத்தை நானோ, நீங்களோ, சிவபெருமானோ கூட அறியவில்லையோ மற்ற தேவர்கள் அதை எப்படி அறிய முடியும்? ஆனால், மாயையால் இவ்வுலகை நாம் நமது குறுகிய கண்ணோட்டத்திலேயே அறிகிறோம். நம்மைப் போன்றவர்கள், எவருடைய அவதார லீலைகளை கீர்த்தனை செய்கின்றோமோ, ஆனால், அவரை உண்மையாக அறிவதில்லையோ, அந்த பகவானுக்கு நமஸ்காரம்.

பிறப்பில்லாத அந்த பகவான் தன்னிடத்திலேயே தானாகவே இந்த சிருஷ்டியை செய்து, சம்ஹரித்து, காக்கவும் செய்கிறார். அந்த பரம்பொருள் சுத்த ஞானஸ்வரூபமானது, நித்யமானது; இரண்டற்றதானது; ஸர்வாந்தர்யாமி; நிர்குணமானது, ஸ்திரமானது, ஸத்யமானது, எங்கும் நிறைந்தது. ஆதியும் அந்தமும் அற்றது. நாரத! முனிவர்கள் எப்பொழுது சுத்தமான மனம், இந்திரியங்கள் மற்றும் உடலைப் பெறுகிறார்களோ, அப்பொழுது இந்த ஆத்ம ஸ்வரூபத்தை அறிவார்கள். தாகத்தில் ஈடுபடும் அறிவிலிகளிடமிருந்து இது மறைந்தே இருக்கிறது. எங்கும்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

வியாபித்து இருக்கும் அந்த பரம்பொருளின் முதல் அவதாரம் இந்த விராட் புருஷனே! நாரத! முதலிலிருந்து நான் கூறிய சிருஷ்டியில் ஒரு சிறிது கூட விலக்கில்லாமல், அனைத்தும் அந்த பரமாத்மாவின் விபூதிகளே ஆகும்.

இதன்பின், “காதில் மலங்களை முற்றிலுமாக நாசம் செய்கின்ற புருஷனின் முக்கியமான லீலா அவதாரங்களை நான் உனக்கு கூறப் போகின்றேன். கேட்பீராக!” என்று பிரம்மா நாரதரிடம் கூறினார்.

## ஏழாவது அத்யாயம்

நாம் பிரபலமாக அறிந்தது தசாவதாரம் என்று சொல்லக்கூடிய பகவானின் பத்து அவதாரங்களே! ஆனால், பகவான் எண்ணிலடங்கா அவதாரங்கள் செய்துள்ளார் என்று, பகவான் தனது வாக்கால் கீதையில் கூறுகிறார். இந்த அத்யாயத்தில் பகவானின் பத்து அவதாரங்களைத் தவிரவும், பகவான் செய்த பல முக்கியமான அவதாரங்களைப் பற்றி பிரம்மா கூறுகிறார். நாரதருக்கு இவ்வனைத்து அவதாரங்களின் தோற்றம், கார்யம், குணம் இவைகளைச் சுருக்கமாகவும் அழகாகவும் எடுத்துரைக்கிறார் பிரம்ம தேவர்.

1) வராஹ அவதாரம் : ஜலத்தில் மூழ்கிக் கொண்டிருந்த பூமியை மேலே கொண்டு வர, பகவான் யக்ஞமயமான வராஹ சரீரத்தை எடுத்துக் கொண்டான். அப்படி அவர் மேலே கொண்டு வரும்போது ஹிரண்யாக்ஷன் அவரை எதிர்கொள்ள, வஜ்ராயுதத்தால் இந்திரன் மலையை பிளந்ததுபோல், வராஹ பகவான் அந்த ஹிரண்யாக்ஷனை தெற்றி பல்லால் பிளந்தார்.

2) யக்ஞ அவதாரம் : ருசி பிரஜாபதி, ஆகூதி தம்பதிகளுக்குப் பிள்ளையாக சுயக்ஞன் ஜனித்தார். இவர் தக்ஷிணை என்ற பெண்ணை மணந்து தேவர்களை ஜனிப்பித்தார். லோகத்தின் துயரங்களை இவர் போக்கடித்தபொழுது ஸ்வாயம்புவ மனுவால் ஹரி என்று பிறகு கூறப்பட்டார்.

3) கபிலாவதாரம் : நாரத! கர்தமரது வீட்டில், தேவஹூதியிடம் ஒன்பது சகோதரிகளுடன் கபில பகவான் பிறந்தார். தன் தாயாருக்கு ஆத்ம வித்யையை உபதேசிக்கவும் செய்தார். தேவஹூதி, அந்த ஆத்ம வித்யையால் இந்த ஸம்ஸாரமெனும்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

சேற்றை அந்த ஜன்மாவிலேயே உதறி தள்ளிவிட்டு, மோக்ஷத்தை அடைந்தாள்.

4)தத்தாத்ரேய அவதாரம் : அத்ரி மஹரிஷி பிள்ளையை வேண்டி தவம் செய்ய, நானே என்னால் கொடுக்கப்பட்டேன் என்று வரம் அளித்து அவருக்கு தத்தராகப் பிறந்தார்.

5) சனகாதிகள் அவதாரம் : சிருஷ்டிக்கு முன் நான் செய்த கடும் தவம் காரணமாக அந்த பகவான் சனத்குமாரர், சனகர், சனந்தனர், சனாதனர் என்று நால்வராக தோன்றினார். முன் கல்பத்தில் பிரளயத்தில் நாசம் அடைந்த ஆத்ம தத்துவத்தை இந்த கல்பத்தில் உபதேசித்தார்.

6) நர நாராயண அவதாரம் : தர்மர் என்பவருக்கும், தக்ஷ பிரஜாபதியின் பெண் மூர்த்தி என்பவளுக்கும், அளவிலா தபோ மஹிமை உடைய நாராயணன் மற்றும் நரன் என இருவராக தோன்றினார். மன்மதனின் சேனைகளான அப்ஸர ஸ்த்ரீகள் இவரது தவத்தை சற்றும் கலைக்க முடியவில்லை. ஏனெனில், அவரிடம் இருந்துதான், ஊர்வசி போன்றவர்கள் தோன்றினார்கள்.
7) துருவனுக்கு அருள வந்த அவதாரம் : உத்தானபாத மஹாராஜா அருகில் இருந்தபொழுதே, மாற்றாந்தாய், பாணங்களை ஒத்த சொற்களைக் கூற, அதனால் காயப்பட்ட துருவன் தவம் புரிய காட்டிற்குச் சென்றான். பிரசன்னம் அடைந்த பகவான் தன்னைத் துதிக்கின்ற அந்த துருவனுக்கு, துருவ ஸ்தானத்தை அளித்தார். அந்த பதத்தை தேவர்களும், சப்த ரிஷிகளும் துதிக்கின்றனர்.

8) ப்ருது அவதாரம் : துஷ்டனான வேனனை பிராமணர்கள் தங்கள் வாக் என்ற வஜ்ராயுதத்தால் எரிக்க, நரகத்தில் விழ இருந்த அவனை, புத்திரனாக அவதரித்து காப்பாற்றினார் ப்ருது. இவரால் உலகின் க்ஷேமம் பொருட்டு, பூமியிலிருந்து அன்னம் முதலிய வஸ்துக்கள் கறக்கப்பட்டது.

9) ரிஷிப அவதாரம் : இந்த ஸ்ரீஹரி, நாபி சுதேவி தம்பதிகளிடம் ரிஷபராக அவதரித்தார். அவர் ஸர்வஸங்க பரித்யாகம் செய்து இந்த்ரியங்களை வென்று, ஸ்வஸ்வரூபத்தில் சம திருஷ்டி உடையவராக, ஜடம்போல் யோகாப்யாசத்தைச்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

செய்தார். இந்த யோகானுஷ்டானம் பரமஹம்ஸர்களால் அடையத் தகுந்தது என்று ரிஷிகள் சொல்கிறார்கள்.

10) ஹயக்ரீவாவதாரம் : தங்க நிறமுடைய யக்ஞபுருஷனான அந்த பகவானே வேதமயனாகவும், யக்ஞமயனாகவும், ஸமஸ்த தேவரூபியுமாக நான் செய்த யாகத்தில் ஹயக்ரீவராக பிரத்யக்ஷமாக ஆவிர்பவித்தார். இவரது மூச்சிலிருந்து திவ்யமான வேதவாக்குகள் வெளிவந்தன.

11) மத்ஸ்யாவதாரம் : யுகம் முடியும் காலத்தில் அடுத்து வரும் யுகத்திற்கான வைவஸ்வத மனுவாக போகின்ற, ஸத்யவ்ரத மஹாராஜாவிற்கு தரிசனம் தந்தார். ஸகல ஜீவர்களுக்கும் இருப்பிடமான மத்ஸ்யமாகத் தோன்றி, வேதங்களை எடுத்துக் கொண்டு பிரளய ஜலத்தில் ஆனந்தமாக விளையாடினார்.

12) கூர்மாவதாரம் : தேவர்களும் அஸுரர்களும் அம்ருதத்தை அடைய பாற்கடலைக் கடைந்தபோது மலையை தாங்குவதற்காக பகவான் கூர்மமாக அவதரித்தார். அந்த மலையின் சுழற்சியால் அவரது முதுகின் அரிப்பு நீங்கி அதனால் தூங்க விருப்பம் கொண்டாராம். (கனியும்)

ஸ்ரீவைகுண்டத்தில் நித்ய வாசம் செய்பவர்களை, பகவான், பூலோகத்தில் அவதாரம் செய்யச் சொன்னால், வைகுண்டபதியான பரவாசுதேவனை பிரிய வேண்டியுள்ளதே என்று எப்படி வருத்தப்படுவார்களோ, அப்படியே பூலோகத்தில் உள்ள அர்ச்சாவதார நிஷ்டரும், அர்ச்சாவதார பெருமாளை விட்டு விட்டு, வைகுண்டம் போக வருத்தப்படுவார்.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**2015 பொங்கல் மற்றும் மாட்டு பொங்கலன்று காலை 6.30AM *ஸ்டார் விஜய்* தொலைக்காட்சியில் - *மதுரகீதம் போட்டி*யின் *இறுதிச் சுற்று* ஒளிபரப்பாக உள்ளது.**



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

காஞ்சிபுரம் ஸ்ரீவரதராஜ பெருமாள் சன்னதியில், பதினாறு கால் மண்டபத்தின் முன் புதியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள, பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களின் அருளிச்செயலான

**"ஸ்ரீகீர்த்தனாவளி மண்டபம்" திறப்பு விழா.**

பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் பொன்னடி சாற்றி திறந்து வைத்து அனுக்ரஹம் செய்வார்கள். **21** ஜனவரி **2015**

## சனாதனப்புதிர் பகுதி 69 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. **10**ஆம் நாள் போரின் முடிவில் பீஷ்மர் தனது ரதத்தில் இருந்து எந்த திசையை நோக்கி இருந்தார். அப்பொழுது என்ன சமயம்?
2. இவைகள் சிகண்டியின் பாணங்கள் அல்ல (நேமே பாணா: சிகண்டின:) என்று பீஷ்மர் துச்சாதனனிடம் சொல்கிறார். எத்தனை தடவை சொல்கிறார்?
3. பீஷ்மர், "நாக்கு வறண்டு விட்டது. ஜலம் வேண்டும்" என்று சொல்லும்பொழுது அர்ஜுனன் என்ன செய்தான்?
4. மூன்று பேரை யமதர்மராஜாவால் வெல்ல முடியவில்லை. அவர்கள் யார்?
5. யமதர்மனுடைய இரண்டு புதல்விகளின் பெயர் என்ன?
6. யுதிஷ்டிரரின் மூன்று பிள்ளைகளின் பெயர் என்ன?
7. ராஜஸூய யாகத்திற்கு ஒப்பாக எதை சொல்லுகிறார்கள்?
8. ராவணன் மூவரால் தோற்கடிக்கப்பட்டான். அந்த மூவர் யார்?
9. பலராமர் - ரேவதி இவர்களின் குழந்தைகள் பெயர் என்ன?
10. வஸுதேவருக்கும் ரோஹிணிக்கும் பிறந்த பெண்ணின் பெயர் என்ன?



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

## சத்சங்கம்

- பூர்ணிமாஜி

சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் ஒரு சம்பவம். ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் மறைவுக்கு பின், இந்தியாவில் பல இடங்களுக்கு பயணம் செய்தார் சுவாமி விவேகானந்தர். அப்பொழுது, காஜிபூரின் ஒரு குகையில் பவஹாரி பாபா என்ற ஒரு யோகி வாழ்ந்து வந்ததை கேள்வியுற்று, அவரை காண ஆவல்கொண்டு அங்கு சென்றார். சுவாமி விவேகானந்தர் பவஹாரி பாபாவால் மிகவும் கவரப்பட்டார். ஹடயோகியான அவரிடமிருந்து உபதேசம் பெற வேண்டும் என்ற ஆசை அவர் மனதில் எழுந்தது. அதற்காக ஒரு நாளையும் நிச்சயித்தார்.

அதைப்பற்றி நினைத்தவாறே கட்டிலில் அவர் படுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று ஸ்ரீ ராமக்ருஷ்ணர் அவர் முன் தோன்றினார். இரண்டு மூன்று மணி நேரம் அவருக்கு இந்த தரிசனம் ஏற்பட்டது. அப்படியே தன் குருநாதரை பார்த்துக்கொண்டு இருந்த போது, 'ஒரு வேளை இவரையே சரண் அடைந்த நாம் வேறு ஒரு குருவை நாட எண்ணியது தவறோ?' என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் ஸ்ரீராமக்ருஷ்ணரும் மறைந்துவிட்டார்.

இப்படி காட்சி ஏற்பட்டும், சுவாமி விவேகானந்தர் பவஹாரி பாபாவிடமிருந்து உபதேசம் பெற வேண்டும் என்ற எண்ணத்தை, முழுமையாக கை விடவில்லை. ஆனால், அவர் இப்படி எண்ணும் போதெல்லாம் ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் காட்சி பலமுறை தொடர்ந்தது. பிறகே, சுவாமி விவேகானந்தருக்கு தான் வேறொரு குருவிடம் செல்வதை, ஸ்ரீராமக்ருஷ்ணர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது புரிந்தது. தன் ஆன்மீக முன்னேற்றத்திற்கு என்ன தேவை என்பது ஸ்ரீராமக்ருஷ்ணரே அறிவார், வேறொருவரையும் நாட வேண்டிய அவசியமில்லை என்பதை அவர் உணர்ந்தார்.

ஸ்வாமி விவேகானந்தர் சரித்திரத்தில் நடந்தது போலவே, மற்றும் எவ்வளவோ மஹான்கள் சரித்திரத்திலும் நடந்துள்ளது. பகவான் ஸ்ரீமத் பகவத் கீதையில் அர்ஜுனனிடம் கூறுகையில், 'மாமேகம் சரணம் வரஜ' என்று, 'என் ஒருவனையே சரணாகதி செய்' என்று கூறுகிறான். இப்படி மஹான்கள் சொல்வதால், அவர்களுக்கு குறுகிய



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

மனப்பான்மை உள்ளது என்று சொல்லிவிட முடியுமா? அல்லது அவர்களுக்கு தனக்கு ஒரு கூட்டத்தை கூட்டி வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசையா? அல்லது அவர்கள் **possessive nature** உடையவர்களா? இத்தகைய கேள்விகள் சாமானிய ஜனங்கள் மனதில் எழுவது நியாயம்தானே. ஒரு குருவிடம் எதற்கு செல்ல வேண்டும்? சிலர் ஒரு குருவை அடைந்தால் கஷ்டம் போகும் என்று எண்ணி குருவை நாடுவார்கள். கஷ்டங்களை போக்குவதற்கு ஜோதிடர்கள் உள்ளார்கள். மாந்திரிகர்கள் உள்ளார்கள். சித்த புருஷர்கள் உள்ளார்கள். அதற்கு குருவிடம் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஒரு குருவை அடைந்து, நம் கஷ்டங்களை அவரிடம் சொல்லிக்கொள்வது வேறு விஷயம்; ஆனால் ஒரு கஷ்டத்தை போக்கிக்கொள்ள, ஒரு குருவை, சிலர் அணுக எண்ணுவது வேறு விஷயம்.

குரு என்ற சொல்லிற்கு, அறியாமையை போக்கி ஞானத்தை தருபவர் என்றே பொருள். நம் சாத்திரங்களில் எங்குமே குரு கஷ்டத்தை போக்குபவர் என்று கூறப்படவில்லை. ரமணர் போன்ற மகான்களின் வாழ்க்கை சரித்திரத்தை படிக்கும் பொழுது கூட, எங்குமே அவர் கஷ்டங்களை போக்கினார் என்றோ, அல்லது அமானுஷ்யமான ஒரு விஷயத்தை செய்தார் என்றோ காண கிடைக்கவில்லை. அவர் ஜடபரதர் போல் ஒரே இடத்தில் அமர்ந்திருந்தார் என்பதுதான் அமானுஷ்யம்!

மிக உயர்ந்த நிலை என்ன தெரியுமா? ஒன்று, தேங்கின குட்டை போல் ஒரே இடத்தில் அசையாமல் ஞான நிலையில் லயித்திருப்பது, அல்லது மடை திறந்த வெள்ளம் போல் ப்ரவாஹமாய் இறைவனின் குணங்களை பாடிக்கொண்டு அதில் மூழ்கியிருப்பது. இந்த இரண்டு நிலைகள் தான் மிக உயர்ந்தவை. ஒரு குரு உண்மையில் இப்படிப்பட்ட ஒரு உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு, தன்னை அண்டி வரும் ஜீவன்களின் அஞ்ஞானத்தை போக்குபவரே ஆவார்.

பல கோடி பிறவிகளில் செய்த புண்ணிய பலன் குவியும்பொழுதுதான், ஒரு ஜீவன் தெய்வ அருளால் ஒரு குருவின் அருகில் வருகிறான். ஒருவன் எத்தனையோ மகான்களுடன் பழகலாம். எத்தனையோ மகிமையுடைய மகான்களுடைய சரித்திரத்தை படிக்கலாம் அல்லது



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

கேட்கலாம். ஆனால் நமக்கென்று ஈஸ்வரன் அனுப்பியுள்ள ஒரு குருவிடம்தான், நம்முடைய மனதின் உள்ளே உள்ள ஒரு ஸ்புரணம் எடுத்துக்கொடுக்கும் (கொண்டு சேர்க்கும்). அப்படி ஒரு ஸ்புரணத்தில் நாம் அவரிடம் வந்தாலும் மாயையும், சதா அலைந்து கொண்டு இருக்கக்கூடிய மனதின் ஸ்வபாவமும் சேர்த்து அவனை தடுமாற செய்யும்.

அப்படி தடுமாற்றம் வரும்போதெல்லாம், அறிவுடனும், விவேகத்துடனும், மனதை அடக்க வேண்டும். மனது அதை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டால் மட்டும் போதாது; அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி நடைமுறைப்படுத்துவதிலும் உறுதி வேண்டும்.

பல கோடி ஜன்மங்களின் புண்ணிய பலனாக ஒரு குருவை அடைந்த போதிலும், அந்த குருவை அடைந்த உடனே அவனுக்கு முக்தி கிடைப்பதில்லை. கங்கையில் குளித்தால் 'மோக்ஷம்' என்று கூறப்படுகிறது. அதற்கு பொருள் கங்கையில் குளித்தவுடனே மோக்ஷம் என்பதல்ல. கங்கையில் குளிப்பதால் உடலும் உள்ளமும் தூய்மையாகி, நமக்கு சத் விஷயங்களில் நாட்டத்தை தந்து, மெல்ல பக்குவப்படுத்தி மோக்ஷத்திற்கான பாதையில் நம்மை சேர்க்கும் என்பதே அதன் உண்மையான அர்த்தம். இது ஒரு நொடியிலோ அல்லது ஒரு நாளிலோ நடக்கும் விஷயம் இல்லை. அதேபோல்தான், குருவிடம் வந்த உடன் மோக்ஷம் என்பதையும் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

குருவை இவன் ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது. குரு அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்று கொண்ட பிறகு, அவனை முக்தி அடைய செய்யும் ஒரு PROCESS ஆரம்பிக்கின்றது. குருவிடமிருந்து அனுக்ரஹ ரூபமான ஒரு PROCESS ஆரம்பிக்கின்றது. அப்போது சீடனின் மனதினுடைய இயற்கையான சேஷ்டைகள் அந்த PROCESSக்கு ஒத்துழைக்காது. அதனால், அந்த முக்தி என்கிற PROCESS நின்று விடுமா என்றால் அப்படியும் நிற்காது. நமது மனமும் அறிவும் ஒத்துழைக்காவிட்டால், இன்னும் நிறைய பிறவிகள் ஆகும். ஆனாலும், அந்த குருவினுடைய கிருபையால் மட்டும்தான் அவன் கரையேற முடியும். அவர் மீண்டும் வந்தால், அவனும் மீண்டும் வருவான் அல்லது அவருடைய பிருந்தாவனத்திலோ சமாதியிலோ ஈடுபட்டு பக்தி செய்து கரையேறுவான்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

ஒருவனுக்கு எந்த பாதை சரி என்பதை அறிந்த குருநாதர், தன்னிடம் வரும் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஏற்ற பாதையையே அவனுக்கு உபதேசிக்கிறார். பகவானை அடைய யோகம், ஞானம், கர்மம், பக்தி, ஆத்மவிசாரம் என்று பல மார்க்கங்கள் சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றில் நமது குரு நமக்கு எந்த பாதையை உபதேசிக்கிறாரோ அதுவே நாம் கடைபிடிக்க வேண்டிய பாதை.

நமக்கு உடலில் ஒரு வியாதி வந்துள்ளது என்று வைத்துக்கொள்வோம். உடனே ஒரு டாக்டரிடம் செல்கின்றோம். அவர் ஒரு **TREATMENT** செய்ய ஆரம்பிக்கின்றார். திடீர் என்று அவருடன் சண்டை போட்டுவிட்டு வேறு ஒரு டாக்டரிடம் சென்றால் குழப்பம் தான் மிஞ்சும். அதே போல், ஆங்கில வைத்தியம் பார்த்து வந்தவன் திடீரென்று அதை விட்டுவிட்டு ஆயுர்வேதம், ஹோமியோபதி, சித்தா என்று மாறி மாறியோ அல்லது சேர்ந்து எடுத்துகொள்வதாலோ வியாதி குணம் ஆவதற்கு பதிலாக விபரீதம் தான் விளையும். அது போல்தான் ஒருவன் குருவை மாற்றிக் கொண்டே இருப்பதோ அல்லது ஞானமார்க்கம், பக்தி மார்க்கம், யோக மார்க்கம் என்று மாறி மாறி போய் கொண்டே சாதனைகளை மாற்றி கொண்டே இருப்பதும். உலகில் பிறந்த அனைவருக்கும் இருக்கும் ஒரு நோய் இந்த ஜனன-மரண சுழலான சம்சாரம் எனும் வியாதி. அது தீரவே நாம் குருவை அடைகிறோம். அவரே பவரோக வைத்தியர்.

அதனால், நம் வாசனை பலத்தாலோ அல்லது பாக்யவசத்தாலோ நாம் ஒரு குருவை அடைந்த பிறகு, இங்கு ஒரு குரு அங்கு ஒரு குரு என்று அலையாமல், இவரிடமே நம் வாழ்க்கையை ஒப்படைத்தோமானால், அவரும் நம் வாழ்க்கையை நடத்தி செல்லும் பொறுப்பை ஏற்று கொண்டாரானால், படிப்படியாக நம் வாழ்க்கையிலும், மனோபாவங்களிலும் தேவையான மாறுதல்களை ஏற்படுத்தி நம்மை மோக்ஷத்தில் சேர்ப்பார். உத்தம குருவிற்கு தன்னை அண்டிய சிஷ்யனை முக்தியில் சேர்க்க வேண்டும் என்ற **COMMITMENT** உண்டு; நாம் எல்லா விதத்திலும் அனுகூலமாக நடந்து கொள்வதே நாம் அவருக்கு செய்யும் உத்தமமான கைங்கர்யம் ஆகும்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

**தெய்வத்தமிழ் இசை விழா - கோபகுடீர ஆண்டு விழா**

**டிசம்பர் 19-25** சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா சார்பாக 8ஆம் வருடமாக தெய்வத்தமிழ் இசை விழா சென்னை அசோக் நகர் மஹோதயா ஹாலில் நடைபெற்றது. திரு.ப.தனபால் எம்.ஏ.பி.எல்., ஆணையர் - இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, விழாவினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். விழாவில் சிறப்பு விருந்தினராக நீதியரசர் ஸ்ரீஅருணாசலம், ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை கலந்து கொண்டு உரையாற்றினார். கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசல கவிராயர், ஆழ்வார்கள், வள்ளலார், மஹாகவி பாரதி ஆகிய பெரியோர்களின் தெய்வத்தமிழ் கானங்களுடன் நாதஸ்வர மங்கல இசையும் இனிதே இடம் பெற்றது. பூர்த்தி அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை, சத்சங்க அன்பர்கள் மிக அழகாக பாடினர். பெருந்திரளான அன்பர்கள் கலந்து கொண்டு இன்புற்று மகிழ்ந்தனர்.

டிச 25 அன்று காலை மஹோதயா ஹாலில், கோபகுடீர 3ஆம் ஆண்டு விழா நடைபெற்றது. குழந்தைகள் நாடக, நாட்டிய, கீர்த்தனங்களுடன், பல அருமையான கலை நிகழ்ச்சிகளை ஸ்ரீஸ்வாமிஜி முன் நிகழ்த்தினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் குழந்தைகளையும் விழாவை ஒருங்கிணைத்த கோபகுடீரம் அன்பர்களையும் பாராட்டி பேசினார். மதியம் மதுரகீதம் பாட்டுப்போட்டி இறுதி சுற்று நடைபெற்றது. ஆறு குழுக்களாக மாணாக்கர்கள் போட்டி போட்டு கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி அற்புதமாக இருந்தது. ஸ்டார் விஜய் டிவி தொலைக்காட்சியினர், இதை முழுவதுமாக ஒளிப்பதிவு செய்தனர். காலையிலும் மாலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட குழந்தைகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே, தம் திருக்கரங்களால் பரிசுகள் வழங்கினார்கள்.

**அக்டோபர் 4 முதல்** (4.10.2014) - **காலை 7.20 - 7.30AM** **ஒவ்வொரு சனிக்கிழமையும்** ***பொதிகை*** **தொலைக்காட்சியில்** "***மதுரகீதம்***" - **ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.**



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

காஞ்சி பெரியவர்கள் மேலும் அந்த தம்பதிகளை கோவிலுக்கு சென்று, பண்டாவின் அனுமதியுடன், தான் சொன்னதாக சொல்லி, அந்த பாண்டுரங்கனின் தலை மேல் கை வைத்து பார்க்க சொன்னார்கள். தம்பதிகளும் அப்படியே செய்ய, பாண்டுரங்கனின் தலையில் அப்படி ஒரு பள்ளம் இருப்பது தெரிந்தது. அந்த பாண்டுரங்கனை தியானம் செய்து, அனுக்ரஹித்ததால் குழந்தையும் இப்படி பிறந்து இருக்கிறது என்று காஞ்சி மஹாபெரியவர்கள் சொன்னதும் புரிந்தது. மஹான்களும், பாகவதர்களும் பகவான் எப்படிப்பட்டவனோ, எப்படி இருக்கிறானோ, அதைத்தான் பாடுகிறார்கள். சொல்கிறார்கள்.

பண்டரீபுர பாண்டுரங்கனால் எதை வேண்டுமானாலும் விட்டு விட்டு இருக்க முடியும். ஆனால் பஜனையை விட்டு அவனால் இருக்க முடியாது. ஜால்ரா சப்தம் எங்கு கேட்டாலும் பஜனையோ என்று நினைத்து அதில் கலந்து கொள்ள வந்து குதிப்பான். அவன் ஒரு சுலப அனுக்ரஹ மூர்த்தி. அவனுக்கு எல்லா மொழி, மத, இன, ஜாதியிலும் பக்தர்கள் உண்டு. அதற்கு முடிவே இல்லை. இந்த பெருமை அவனுக்கு மட்டுமே உண்டு.

விடியற்காலைவேளையில் ஸ்மரிக்கத்தக்க மஹா பாகவதர்களில் பீஷ்மர் போன்ற மஹான்களை சொல்கையில் "ப்ரஹ்லாத நாரத பரசார புண்டலீக வ்யாச அம்பரீஷ சுக சௌனக பீஷ்ம ... ருக்மாங்கத" என்ற வரிசையில் புண்டலீகனையும் ஸ்மரிக்கிறோம். இதிலிருந்தே புண்டலீகனின் பெருமையும், அவனுக்கு தரிசனம் கொடுத்த பாண்டுரங்கன் எப்படிப்பட்ட ஸ்வாமி என்பதும் நமக்கு புரிகிறது அல்லவா?

**விஷ்ணுபாதம்**

பண்டரீபுரத்தில் ஓடும் சந்திரபாகா நதியின் கரையில் ஒரு சின்ன மண்டபத்தை பார்க்கலாம். அந்த மண்டபத்தில் விஷ்ணுபாதம் இருக்கிறது. ராமராயர் எனும் பக்தரின்




PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

அழைப்பிற்கிணங்க, பாண்டுரங்கன் சிறிது காலம் பண்டரியை விட்டு விட்டு, விஜயநகர பேரரசில் மிகப்பெரிய கோவிலில் இருந்தான். அந்த பெரிய கோவிலை அவனுக்காக ராமராயர் கட்டினார். பானுதாஸர் என்னும் மஹாத்மா மறுபடியும் பாண்டுரங்கனை பண்டரிக்கு அழைத்து வந்தார். இந்த பானுதாஸரின் வம்சத்தில்தான் சக்ரபாணி, சூரிய நாராயணன், ஏகநாதர் போன்ற மஹான்கள் வந்தார்கள். பாண்டுரங்கன் ஹம்பிக்கு சென்று திரும்பிய சுவையான சம்பவம், பானுதாசரின் சரித்திரத்தில் விரிவாக பின்னர் இடம் பெறும்.

விஜயநகரத்திலிருந்து பாண்டுரங்கன் திரும்பி வரும்பொழுது, ஊர் முழுக்க கிடுகிடுவென செய்தி பரவிவிட்டது. பானுதாஸர் எல்லோரையும், "விட்டலன் வந்து விட்டான். எல்லோரும் வாருங்கள்; பாருங்கள்" என்று அழைத்தார். எல்லா பாகவதர்களும் ஊர் ஜனங்களும் ஓடி வந்தனர். திருவாரூரில் கமலாலயம் இருப்பது போல், இந்த மண்டபத்திற்கு அருகிலும் பத்மாலயம் என்ற குளம் இருக்கிறது. எல்லா பக்தர்களும் ஜனங்களும் வரும் வரையிலும் பாண்டுரங்கன் இந்த பத்மாலயத்தின் அருகிலேயே இருந்தான். அதனால், அந்த பத்மாலயம் எனும் தாமரைக்குளமும் பவித்ரமானது. சந்திரபாகா நதிக்கரையில் இந்த இடத்தில் அவன் இருந்தபொழுது, குழலை எடுத்து பாலகோபாலனாக வேணுகானம் செய்திருக்கிறான். அவனுடன் பசுமாடுகளும் கன்று குட்டிகளும் விளையாடின. அதனால்தான், பானுதாஸர் இந்த சம்பவத்தைப் பற்றி பாடும்பொழுது, "தன்ய தன்ய ஹே நகர பூவைகுண்ட பண்டரிபுர" எனும் அபங்கத்தில் பண்டரீபுரம், சந்திரபாகா, வேணுநாதம், பத்மாலயம் என்று எல்லாவற்றையும் சிறப்பித்து பாடுகிறார். பகவான் இப்படி இங்கு வேணுகானம் செய்தவாறு பசுமாடுகளுடனும் கன்றுக்குட்டிகளுடனும் விளையாடிய பொழுது, அவன் பாதம் பதிந்தது. அதுவே விஷ்ணு பாதம். அருகில் சுற்றிலும் பசுமாடுகளின் குளம்படிகள் இருப்பதை பார்க்கலாம். எல்லோரும் பகவானுடன் ஆனந்தமாய் பஜனை செய்தார்கள். சிறிது காலம் கழித்து பாண்டுரங்கன் இங்கிருந்து தனது யோகபீடமான பண்டரி கோவிலுக்கு கிளம்பி போனான் என்று தெரிகிறது.

(தொடரும்)



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# பாலகர்களுக்கு ஒரு கதை



## சகோதர பாலம்!

மாதவனும் சங்கரனும் சகோதரர்கள். தங்கள் தந்தையால் கொடுக்கப்பட்டிருந்த வயல்களை உழுது ஜீவனம் நடத்தி வந்தனர். மிகுந்த பிரியம் காட்டி வந்த இருவருக்கும் இடையே காலப்போக்கில் ஒரு பெரிய பிரச்சனை வெடித்தது. 40வருட பாசம் அது. இருவரும் தங்களுக்கு தேவையான எந்திரங்கள், வேலையாட்கள் அல்லது விவசாயத்திற்கு தேவையான வேறு எதுவாக இருந்தாலும் அன்புடன் பகிர்ந்து கொள்வது வழக்கம். அதில் அவர்களுக்கு பிணக்கே வராது. எப்பொழுதும் விட்டுக் கொடுத்து சென்ற அந்த சகோதரர்களிடையே இருந்த அந்த பாசம் முறியும் தருவாயில் இருந்தது. வாய்த்தகராறு முற்றியது. இருவரும் பேசாமல் இருந்தனர். ஒருவருக்கொருவர் மனதில் காழ்ப்புணர்ச்சியுடன் இருந்து வந்தனர்.

ஒருநாள் அண்ணன் மாதவன் வீட்டிற்கு ஒரு தொழிலாளி வந்தார். "அய்யா! எனக்கு தச்சு வேலையும் தெரியும். குயவனார் வேலையும் தெரியும். எனக்கு சில நாட்கள் வேலை தந்தால் தங்களுக்கு புண்ணியமாக போகும்" என்றான் அந்த புதியவன்.

கொஞ்சம் யோசித்த மாதவன், "அதோ பாருங்கள். பக்கத்து வயலில் ஒரு சிற்றோடை ஓடுகிறது அல்லவா. அது சில வாரம் முன்பு இல்லை. அந்த வயல் என் சகோதரனுடையதுதான். அவன் ஒரு புல்டோஸரை வயலினூடே ஓட்டி ஆறு வரை அகழப்படுத்தி விட்டான். அதன் விளைவுதான் இந்த நீரோடை. என்னை வெறுப்படைய செய்ய இப்படி செய்திருக்கிறான். நீங்கள் ஒன்று செய்யுங்கள். அவனுக்கு என்னையோ, எனக்கு அவன் வயலோ தெரியாதபடிக்கு ஒரு மதிலை எழுப்பி விடுங்கள். அது மிக விரைவில் செய்ய வேண்டும்" என்றான். மாதவன் சொல்வதை நன்கு கவனித்த அந்த புது வேலையாள், "சரி. மரத்தால் இதை செய்கிறேன். இதை செய்ய இது எல்லாம் தேவை" என்று பட்டியலிட்டான்.

மாதவனும் "சரி. இதை எல்லாம் ஏற்பாடு செய்து விடுகிறேன். உடனே முடித்து விடு. என் தம்பி முகத்தில் நான்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

இனி முழிக்க கூடாது. எனக்கு பட்டணத்தில் கொஞ்சம் வேலை இருக்கிறது. மாலைதான் வருவேன். அதற்குள் வேலை ஆக வேண்டும். கூலியை பற்றி யோசிக்காதே. நீ கேட்பதை தருகிறேன்" என்று துரிதப்படுத்தினான். அவன் பேச்சில் ஆக்ரோஷம் இருந்தது.

மாதவன் கிளம்பி சென்ற பிறகு அந்த வேலையாள் தன் வேலையை துவங்கினான். மாலை திரும்பி வந்தான் மாதவன். வந்தவனுக்கு ஒரு பேரதிசயம் காத்திருந்தது. வாங்கிக் கொடுத்திருந்த மரக்கட்டைகளால், அந்த வேலையாள் ஒரு அற்புதமான பணி செய்திருந்தான். அது மிக நேர்த்தியாய் கச்சிதமாக அழகாக இருந்தது. அது அவன் நன்கு பயிற்சி பெற்றவன் என்பதை பறை சாற்றியது. ஆனால் ஒரே ஒரு மாற்றம். அவன் மதில் சுவரை கட்டவில்லை. அந்த சிற்றோடையின் மேலே, ஒரு அழகான பாலம் அமைத்திருந்தான்.

அதன் அழகையும் நேர்த்தியையும் வாய் பேசாமல், ஆச்சரியமுடன் மாதவன் பார்த்தவாறே அதில் நடக்க, எதிர் திசையிலிருந்து சங்கரன் வந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் குழைந்திருந்தன. நெருங்கி வந்து மாதவனின் கைகளை பிடித்துக்கொண்டான். மாதவன் எதுவும் பேசும் முன் அவனாகவே, "அண்ணா! உனக்கும் எனக்கும் உள்ள இடைவெளியை நான் பெரிதுபடுத்தினேன். ஆனால் நீயோ அதை பாராட்டாமல் அந்த இடைவெளியை குறைத்து விட்டாய். உன் பெருந்தன்மை என்னை வென்று விட்டது" என்று சொல்லி அண்ணனை வணங்கி ஆரத்தழுவிக் கொண்டான். மாதவனுக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் கலையாதிருக்கும் நிலையிலேயே அந்த புதிய வேலையாள் வந்து, "அய்யா! நான் வருகிறேன். வேலை முடிந்தது" என்றான்.

மாதவன் அவசர அவசரமாக "சில நாள் இருங்கள். மேலும் சில வேலை இருக்கிறது" என்றான். அந்த வேலையாளோ, "அய்யா! நான் தச்சன் மட்டுமல்ல. எனக்கு பல வேலைகள் தெரியும். மேலும் பல உறவுகளுக்கு பாலம் கட்ட வேண்டி இருக்கிறது. அவசரமாக கிளம்ப வேண்டும்" என்றான்! அவனை பார்த்து இரு சகோதரர்களும் கை கூப்பியவாறு நின்றனர்!!



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

**டிசம்பர் 5-** சென்னை மந்தைவெளி சிருங்கேரி மடத்தில் நடைபெற்ற, ஸ்ரீநாராயணதீர்த்தரின் பஜனை மேளாவை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் துவக்கி வைத்து, அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.

**டிச 7 -** சென்னை மயிலாப்பூர் பி.எஸ்.உயர் நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில், ஸ்ரீமூகபஞ்சசதீ ஸ்லோகத்திற்கு பேராசிரியர் சௌந்தரராஜன் எழுதிய, தமிழ் விளக்கவுரை நூலை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வெளியிட்டார்கள். முதற்பிரதிகளை முல்லைவாசல் டாக்டர் ப்ரும்மஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் மற்றும் ப்ரும்மஸ்ரீ தினகரசர்மா ஆகியோர் பெற்று கொண்டனர்.

**டிசம்பர் 11** திருப்பூரிலுள்ள ஸ்ரீவீரராகவ பெருமாள் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீமத் பாகவதம் குறித்து அருளுரை வழங்கினார்கள். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு குருவருளும் திருவளும் பெற்றுச் சென்றனர்.

**டிசம்பர் 13-15** திருப்பூந்துருத்தி ஸ்ரீநாராயணதீர்த்தரின் அதிஷ்டானத்தில் ஸ்ரீசட்டநாத பாகவதரின் ஸ்ரீப்ரேமிகவரதன் பஜன் மண்டலி சார்பாக, ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணி மஹோத்ஸவம் மருதாநல்லூர் ஸ்ரீகுருகோதண்டராம ஸ்வாமிகள் துவக்கி வைக்க, ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்வைபவத்தில், பல பாகவதர்கள் கலந்து கொண்டு அழகாக நாராயண தீர்த்தரின் தரங்கங்களை முழுவதுமாக பாடினர். ருக்மிணி கல்யாணத்துடன் வைபவம் இனிதே நடந்து முடிந்தது. திரளான அன்பர்கள் வந்து கலந்து கொண்டு குருவருள் பெற்று சென்றனர்.

**டிசம்பர் 18** அயோத்யா மண்டபம் ஏகாதசி அன்று, ப்ரும்மஸ்ரீ ஸ்ரீராஜகோபால கனபாடிகள் நடத்தி வரும் வைதீகஸ்ரீ பத்திரிக்கை சார்பாக நடைபெற்ற ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகளின் ச்ரத்தாஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி காஞ்சி மஹாஸ்வாமிகளை பற்றி அருளுரை வழங்கினார்கள். திரளான அன்பர்கள் வந்திருந்து குருவருள் பெற்றனர்.

**டிசம்பர் 21** அனுமத் ஜெயந்தியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்தில் கன்யாகுமரி ஜய ஹனுமானுக்கு வடைமாலை சாற்றி விசேஷ திருமஞ்சனம் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. திரளான அன்பர்கள் வந்திருந்தனர்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

**டிசம்பர்** 6 அன்று பெங்களூர் ஞானஜோதி ஆடிட்டோரியம், பெங்களூரு பல்கலைக்கழகம் மற்றும் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாக ஸீதாராம ஹாலிலும் GOD பெங்களூரு சார்பாக மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நடைபெற்றது. 35பள்ளிகளில் இருந்து சுமார் 2000மாணவர்கள் வந்து கலந்து கொண்டனர். பாக்யாஜி, குருமூர்த்திஜி, விஜய்ஜி ஆகியோர் மாணவர்களை ஊக்குவித்து சிறப்பாக பேசினர். ஸ்ரீஅபிஷேக் நிகழ்ச்சியை நன்கு ஒருங்கிணைத்து நடத்தினார். GOD பெங்களூரு சார்பாக சிறந்த முப்பதுக்கும் மேற்பட்ட மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

**நவம்பர்** 25 - **டிசம்பர்** 9 வரை முரளிஜி தூத்துக்குடி, கோவில்பட்டி, திருநெல்வேலி, நாகர்கோவில், அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் 23பள்ளிகளில் 9000மாணாக்கர்கள் முன்பு மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை நிகழ்த்தி ஊக்குவித்து பேசினார். டிசம்பர்7 அன்று அம்பை வேணுகோபால ஸ்வாமி கோவிலில் மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை நிகழ்த்தினார்.

**நவம்பர்** 14 -20 ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசிகளுடன் தொடர்ந்து அமெரிக்காவில் ராமானுஜம்ஜி முன்னிலையில் பல சத்சங்கங்கள் நடைபெற்றன. கலிபோர்னியா Siddhi Vinayaka Cultural Centerஇல் ராமானுஜம்ஜி ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் நிகழ்த்தினார். **நவம்பர்** 21 பாகவத தர்மம் குறித்து சிகாகோவில் ராமானுஜம்ஜி உரையாற்றினார்.

**நவம்பர்** 23 - 29 டல்லஸ் குருவாயூரப்பன் கோவிலில், ராமானுஜம்ஜி தலைமையில் **மதுரோத்ஸவம்** நடைபெற்றது. காலை வேத பாராயணம், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களின் இனிய கானம், குழந்தைகளின் நாடகங்கள், பரதநாட்டியம், சத்சங்க உரைகள், பல வாஹனங்களில் ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு புறப்பாடு ராமானுஜம்ஜியின் உபன்யாசம் ஆகியவை இடம் பெற்றிருந்தது. பூர்த்தியாக ராதா கல்யாணம் நடைபெற்றது. டிச 1 இல் ஸ்ரீமதி லதாகுமணன் ஏற்பாடு செய்த ஒரு சத்சங்கத்திலும் டிச 3இல் பாகவத தர்மம் தலைப்பில் இந்து கோவிலிலும் நியூயார்க்கில் பல அன்பர்கள் முன் ராமானுஜம்ஜி உரை நிகழ்த்தினார். டிச 7: டல்லஸ் நகரில் Global Organisation for Divinity மற்றும் Ellora centre for Forming Arts இணைந்து "ராதே ராதே" என்ற நாட்டிய நாடகத்தை டிசம்பர் 7 அன்று இர்விங் பள்ளி அரங்கத்தில் மிகச் சிறப்பாக



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

நடத்தினார்கள். முக்கியமாக மாயக்கூத்தன்ஜியும், மற்றும் பல அன்பர்களும் சேர்ந்து, இவ்வைபவத்தை மிக அழகாக நன்கு ஒருங்கிணைத்து நடத்தினர். சிறுவர் சிறுமிகள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனைகளை பல்வேறு வாத்தியங்களில் வாசித்தும் பாடியும் பார்வையாளர்களை மகிழ்வித்தனர். அதன்பின்னர் ஸ்ரீமதி உமா ரங்கநாதன் இசையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனைகளின் அடிப்படையில் அமைந்த "ராதே ராதே" என்ற ப்ரேம பக்தி நாட்டிய நாடகம் ஸ்ரீமதி வாணி ஈஸ்வர நாட்டிய இயக்கத்தில், ஸ்ரீராதாராணியின் பிறப்பு, வளர்ப்பு என்று ஒவ்வொரு பருவத்திலும், கிருஷ்ண பக்தி எவ்வாறு மிளிர்ந்தது என்பது காண்பிக்கப்பட்டது. சுமார் 600 ரசிகர்கள் இந்த இசை நாட்டியத்தை கண்டு களித்தார்கள். விழா அமைப்பை ஸ்ரீமதி உமா ராவ் மிக அருமையாக தொகுத்து வழங்கினார்கள்.

**டிசம்பர் 14** அன்று மதுரபுரி ஆஸ்ரம வளாக கல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் உற்சவர் வனபோஜனம் கண்டருளினார். சுற்று சூழல் மேன்மை கருதி மரக்கன்றுகள் நடப்பட்டன.

---

## சனாதனப்புதிர் பகுதி 69 - விடைகள் -ஆத்ரேயன்

1. விழும்பொழுது தலை கிழக்கு நோக்கி இருந்தது. சூரிய அஸ்தமனத்திற்கு சற்று முன்னால். தக்ஷிணாயணம்.
2. ஆறு தடவை.
3. பர்ஜன்ய அஸ்திரத்தின் மூலம் பீஷ்மருடைய வலது பக்கத்தில் பூமியில் இருந்து நீர் ஊற்று வரும்படி செய்தான்.
4. அஜாமிளன்; சாவித்ரி; மார்க்கண்டேயர்.
5. உபதானவி; ஹிமா.
6. ப்ரதிவிந்யன்; சுதாணு; தேவகன் மூன்றாவது பிள்ளை பௌரவிக்கு பிறந்தது.
7. ப்ரஹ்மாண்ட புராணத்தை தானம் செய்தாலும்; அக்ஷய திருதியை அன்று ஒருவன் ஒன்றும் சாப்பிடாமல் விஷ்ணுவை துதித்தாலும்; ப்ரயாகையில் ஸ்நானம் செய்தாலும் ஆயிரம் ராஜஸூய யாக பலன் என்று சொல்லி இருக்கிறது.
8. புஷ்கரத்தில் வாலியால்; மாஹிஷ்மதியில் கார்த்தவீர்யார்ஜுனனால்; லங்கையில் ஸ்ரீராமனால்.
9. நிஷிதன்; உல்முகன்.
10. சித்ரா.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி



## பக்தராஜ் ஸ்ரீமானஸிம்ஹஜி-1

பக்தராஜ் ஸ்ரீமானஸிம்ஹஜி ஜெய்பூர் ராஜ்யத்தின் லோரடீ எனும் இடத்தில், ஸவாயிஸிம்ஹ என்பவரின் புதல்வராக பிறந்தார். ராஜ குடும்பம். ஆதலால், பெற்றோர்களின் அரவணைப்பு, பணியாட்களின் ஸேவை மற்றும் குடும்பத்தின் நிகரற்ற உயர்ந்த சூழலிலும், அவர் ராஜ போகங்களுடன் வளர்ந்தார். வயது ஆக ஆக, அவர் அழகிலும், குணங்களிலும் மேன்மை ஏற்பட்டது. மிகவும் அழகான மற்றும் மென்மையான வாலிபராக அவர் வளர்ந்தார்.

இப்படி குணங்களோடு வளர்ந்தபோதிலும், அவரது தந்தை ஸவாயிஸிம்ஹஜியிற்கு கவலையாக இருந்தது. க்ஷத்ரிய குணங்கள் மானஸிம்ஹிடம் மிகவும் குறைவாக இருந்ததே அவர் கவலைக்குக் காரணம். க்ஷத்ரியர்களுக்கு ப்ரியமான மாம்ஸத்தையும், மதுவையும் மானஸிம்ஹஜி அறவே வெறுத்தார். எவ்விதத்திலும் அவர் ஹிம்ஸையை எதிர்த்தார். நவராத்திரியின் பொழுது, தேவி பூஜைக்காக பலி கொடுக்கப்படும் ஸமயம், அவர் அங்கிருந்து எழுந்து சென்றுவிடுவார். பலி பீடத்தில் ஒரு அபலையான தோஷமற்ற உயிரின் ரத்தம் சிதறுவதை அவரால் பொறுக்க முடியாது.

துப்பாக்கி சூடு, குதிரை ஏற்றம், வேட்டை ஆடுதல் போன்ற க்ஷத்ரியர்களுக்கே உரிய பயிற்சிகளை பயில்விக்க ஸவாயிஸிம்ஹ் எத்தனையோ முயற்சிகள் எடுத்தார். ஆனால் மானஸிம்ஹிற்கு இவைகளில் எந்தவித ருசியும் ஏற்படவில்லை. பிறவியிலேயே, அவருடைய ஸம்ஸ்காரங்கள் இவைகளுக்கு எதிர்மறையாகவே இருந்தன. ஸாது ஸங்கம், பூஜை, பாராயணம், தர்ம சிந்தனை போன்றவைகளில்தான், அவருக்கு ஸ்வபாவமான ருசி இருந்தது. நாராயண ஸ்வாமி என்றொரு ஸாது, அவர் தாயிடம் ஸத்ஸங்கம் செய்ய வந்து போய் கொண்டிருப்பார். இவரும் ஸத்ஸங்கம் செய்வார். தானகியா எனும் கிராமத்திலிருந்த ஸந்த் ஸ்ரீகோபாலதாஸ்ஜியிடமும் அவர் செல்வார். அவரிடமிருந்து கீதை கற்பார்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

விவாஹம் செய்து வைத்தால், ஒருக்கால் மானஸிம்ஹனின் மனம் மாறுமோ என்று ஸவாயிஸிம்ஹ் எண்ணினார். அதனால் 17 வயதே நிரம்பிய மானஸிம்ஹிற்கு மௌன்குன்வர்ஜி என்ற பெண்ணுடன் திருமணம் முடித்தார். ஒரு ஆண்டு காலத்திற்கு பின் ஒரு ஆண்மகவும் பிறந்தது. ஆனால் இதனாலெல்லாம், அவர் மனதில் பெரிய மாற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. மாறாக அவரது வைராக்யம் மேலும் தீவிரமானது. சிறு வயதிலேயே, அவர் வாழ்வின் அனைத்து இன்பங்களையும் பெற்றுவிட்டிருந்தார். குடும்பத்தில் மூத்த பிள்ளையாக இருந்ததால், அத்தனை சொத்திற்கும் அவர் ஒரே வாரிசு. ஸம்ஸார சுகங்கள், பெற்றோர்களின் அன்பு, உடன் பிறப்புகளின் பாசம், அழகான மனைவி, குழந்தையென்று எல்லாம் அவருக்கு இருந்தது. இதை காட்டிலும் ஸம்ஸாரம் ஒருவனுக்கு என்னதான் அளிக்க முடியும்?

இத்தனையும் இருந்தபோதிலும், அவர் விரும்பிய மன சாந்தி அவருக்கு சற்றும் கிடைக்கவில்லை. இந்த ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டே சாந்தியை எதிர்ப்பார்ப்பது, வாயை திறந்து எதிரே நிற்கும் ஒரு புலியிடமிருந்து சாந்தியை எதிர்ப்பார்ப்பதிற்கு ஒப்பாகும் என்று அவர் எண்ணினார். இதிலிருந்து ஓடிச் சென்று விடவேண்டும் என்று அவரது மனம் பரிதவித்தது.

நாராயண ஸ்வாமி மற்றும் கோபால்தாஸ் பாபாவின் ஸங்கத்திலும், அவருக்கு அந்த சாந்தி கிடைக்கவில்லை. உண்மையில் தனக்கு என்ன வேண்டும் என்பதை அவரே அறியவில்லை. தனது மனநிலை தெரிந்து, தகுந்த ஆலோசனை அளிக்கும் ஒரு மஹாபுருஷரின் உபதேசம் அவருக்கு தேவையாக இருந்தது. கீஜ்கட்-யை சேர்ந்த டாகுர் குசல்ஸிம்ஹஜி என்பவர் அந்த காலகட்டத்தில் பெரிய ஸாதகர் என்ற புகழ் பெற்றிருந்தார். மானஸிம்ஹஜியும் அவரைப் பற்றி கேள்விபட்டிருந்தார். ஒருகால் இவர் நமக்கு வழி காட்டுவாரோ என்று எண்ணி, வீட்டில் யாரிடமும் கூறாமல் குசல்ஸிம்ஹை சந்திக்க ஜெய்பூர் சென்றார். அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தனது மனோநிலையை கூறி தகுந்த ஆலோசனையளிக்குமாறு ப்ரார்த்தித்தார். **(தொடரும்)**



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# *மாலே மணிவண்ணா – 135*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

ஸ்ரீஇருந்த வளம் உடையார் கோயிலில் எழுந்தருளி உள்ள பெருமானை தோத்திரம் செய்யும் பாடலை காண்போம்.

வான் ஆர் எழிலி மழைவளம் நந்தத்
தேன் ஆர் சிமைய மலையின் இழிதந்து
நான்மாடக்கூடல் எதிர்கொள்ள ஆனா
மருந்தாகும் தீநீர் மலிதுறை மேய
இருந்தையூர் அமர்ந்த செல்வ! நின்
திருந்தடி தலையுறப்பரவுதும் தொழுது

"ஆகாயத்தில் வரைந்தெழுந்த மேகங்கள் மழையை பெரிதும் உண்டாக்கியதால், அம்மழைநீர் தேனடைகள் பொருந்திய உச்சியை உடைய மலையிலிருந்து இறங்கி நான்மாடக்கூடல் எனப்பெறும் மதுரை மாநகர் எதிர்கொள்ளும்படி வைகை நதியாக வந்து, மிக சிறந்த மருந்தாகும் தன்னுடைய இனிய நீரால் சிறப்புற விளங்கும் வைகை நதித்துறையில் கோயில் கொண்டு இருந்தையூரில் எழுந்தருளி இருக்கும் பெருமானே! உன்னுடைய அழகிய திருவடிகளை எங்கள் தலை தொடும்படி வணங்கி தோத்திரம் செய்கின்றோம்"

என நாட்டு சிறப்பும் நகர சிறப்பும் கோயிற்சிறப்பும் கூறினார். (எழிலி - மேகம், நந்த - பெருக). மழைவளம் பெருகி மலை உச்சியிலிருந்து இறங்கி, மதுரை நகர் வரவேற்கும்படியாக மதுரை நகரில் உள்ளவர்களுக்கு உண்ணும் உணவாகவும் மருந்தாகவும் உள்ள வைகையாற்றுத்துறையிலே உள்ள இருந்தையூர் என்றார். ஆற்று நீர் உணவாகவும் மருந்தாகவும் பயன்படுவது ஆதலின் மருந்தாகும் தீநீர் என்றார். உடலை வளப்படுத்தும் உண்ணும் நீராகவும் உடலுக்கு உணவாக பயன்படும் மற்ற பொருள்களை விளைவிக்கவும், நோய் வந்தால், அதை போக்கி கொள்ள மருந்தாகவும் பயன்படுவது ஆற்று நீர் என்பதை,




PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

நினைவுறுத்தி ஆற்று நீரை தூய்மை கெடாது பயன்படுத்த வேண்டும் என்பதை அறிவுரையாக உட்பொதிந்து வைத்தார் என்றும் கூறலாம்.

மலை மேல் எவ்வளவு மழை பொழிந்தாலும் அம்மழை நீர் மலைக்கு பயன்படுமாறு இல்லை. மழைநீர் ஆறாக வந்து நகரத்தை அடைகிறபோது, நகர மக்களுக்கு பயன் தரும் ஆதலின் நகரம் நீரை வரவேற்பதாக சொன்னார். மதுரை என்பதன் வேறொரு பெயர் நான்மாடக்கூடல் என்பதாகும். நான்கு மாடம் கூடலின், நான்மாடக்கூடல் எனப்பெற்றது. திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் என்று அக்காலத்திருந்த நான்கு நகர பகுதிகளின் சேர்க்கை மதுரை என்பது நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகிய உரையாசிரியர்கள் கருத்தாகும். அவர்கள் மேலும் கன்னி, காளி, கரியமால், ஆலவாய் ஈசன் என்றும் என்று கூறியுள்ளமை இங்கு உணரத்தக்கதாகும். இந்நால்வரும் கோயில் கொண்டு மதுரையை காக்கின்றனர் என்பது கருத்து.

(தொடரும்)



75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# *ஸ்ரீ மஹாபெரியவாள் கருணை*

- ப்ரும்மஸ்ரீ பம்மல் ஏகாம்பரம்

---

**1964**ஆம் வருடம் மார்கழி மாதம் ஸ்ரீபெரியவாள் காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தில் தங்கியிருந்தார். அன்று வைகுண்ட ஏகாதசி தினமாகவும் இருந்தது. ஸ்ரீபெரியவாள் அன்று சுத்த உபவாசம். காலை பூஜை ஆனவுடன் வெளியில் அமர்ந்திருந்தார்கள். வரும் பக்தர்கள் எல்லாம் தரிசனம் செய்து கொள்வார்கள். இரவு பூஜையை, புது பெரியவர்கள் செய்து வருவார்கள். அன்று வெளியூரிலிருந்து வெங்கட்ராமய்யர் என்ற பக்தர் தனது மனைவியுடன் வந்து தரிசனம் செய்து கொண்டார்கள். வெங்கட்ராமய்யர் தான் சமீபத்தில் சென்று வந்த க்ஷேத்திரங்களை பற்றி ஸ்ரீபெரியவாளிடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர் அந்த சமயம் நிறைய வைணவ தலங்களுக்கு சென்று தரிசனம் செய்த விஷயத்தை சொல்லிக்கொண்டிருந்தார். ஸ்ரீபெரியவாள் அவரிடம், "நீ பார்த்த பெருமாளிலேயே எந்த பெருமாள் மிகவும் பெரிய பெருமாளாக உள்ளார்?" என்று கேட்டார். அதற்கு உடனே வெங்கட்ராமய்யரும், "ஸ்ரீரங்கம் ரங்கநாத பெருமாளும் திருவனந்தபுரம் அனந்தபத்மநாப பெருமாளும் பெரிய பெருமாள்" என்றார்.

ஸ்ரீபெரியவாள் அவரிடம், "இந்த இரண்டு பெருமாளில் யார் மிகவும் பெரிய பெருமாள்" என்று கேட்க, அவரும் சற்று யோசித்து, அனந்த பத்மநாப பெருமாள் சற்று பெரிய பெருமாளாக தெரிகின்றார் என்றார். அவரிடம் நாளை ஊருக்கு போகலாம் என்று கூறி விட்டார். இரவு **9.30**மணி இருக்கும். ஸ்ரீமடத்து வராந்தாவில் தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்த பெரியவர்கள் என்னிடம் பல்லக்கை எடுத்து வர சொன்னார். கைங்கர்யம் செய்து கொண்டிருந்த நாங்களே பல்லக்கை தூக்கி கொண்டு வந்து வாசலில் வைத்தோம்.

ஸ்ரீபெரியவாள் பல்லக்கில் எழுந்தருளினார். காஞ்சியில் உள்ள பாண்டவ தூதர் கோவிலுக்கு எங்களை போக சொன்னார். வழக்கமாக அந்த கோவிலுக்கு, அப்பொழுது எல்லாம் பெரிய கூட்டம் வராது. சீக்கிரமாக நடை சாத்தி



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

விடுவார்கள். அன்று வைகுண்ட ஏகாதசியாக இருந்ததால் திறந்து இருந்தது. ஸ்ரீபெரியவாள் விஜயத்தை, நான் அந்த கோவிலுக்கு சொல்லி அனுப்பி இருந்ததால் அர்ச்சகரும் பூரண கும்ப மரியாதையுடன், வாசலில் காத்திருந்தார்கள். பாணாம்பட்டு கண்ணன் அவர்களிடம், நான் சொல்லி இருந்தபடியால் அவர் பழக்கூடை, அர்ச்சகர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பாவனைக்கான பணப்பை இவைகளுடன் வந்திருந்தார். ஸ்ரீபெரியவாள் வருவதால், நல்ல கூட்டம் கூடி விட்டது. க்ஷேத்திராடனம் செய்து வந்த வெங்கட்ராமய்யரும் உடன் வந்தார். வெங்குடி டாக்டர் ஸ்ரீராமமூர்த்தி அய்யர் மற்றும் அவரது தம்பி ஸ்ரீஸ்வாமிநாத அய்யர் அவர்களும் உடன் வந்திருந்தார்கள். ஸ்ரீபெரியவாள் ஒரு தீப ஒளியில் பெருமாளின் திருமுகத்தை காட்ட சொன்னார்கள். அர்ச்சகரும் அப்படியே செய்ய, ஸ்ரீபெரியவாள் வெங்கட்ராமய்யரை பார்த்து, "நீ பார்த்த அனந்த பத்மநாப ஸ்வாமி எழுந்து உட்கார்ந்தால் இவ்வளவு பெரியவராக இருப்பாரா? கிட்டே வந்து நன்றாக பார்" என்றார். அவரோ மலைத்து போய், "இவ்வளவு பெரிய பெருமாளை நான் பார்த்ததே இல்லை" என்று கூறிக்கொண்டே, அழ ஆரம்பித்து விட்டார். அர்ச்சகரும் பிரசாதம் கொடுத்தார்.

பகவான் பாண்டவர்களுக்காக தூது வந்த சமயத்தில், அவரை, துரியோதனன் வஞ்சகமாக கட்டப் பார்க்கின்றான். அப்பொழுது அங்கு அவர்களால் கட்ட முடியாதபடி, பெரிய பெருமாளாக ஆனார். அவருடைய கிரீடம், வஸ்திரங்களின் மயில்கண் ஜரிகை பட்டு, மாலைகள் எல்லாவற்றிலும் இந்த பிரபஞ்சங்கள் சுழன்று கொண்டிருந்தன. இவர்தான் பாண்டவ தூத பெருமாள். அப்பொழுது, அங்கு இருந்த வெங்குடி டாக்டர் சகோதரர்களை அருகில் அழைத்து, அவர்களிடம் "இந்த பெருமாளுக்கு இன்று வைகுண்ட ஏகாதசி. இவருக்கு தினமும் செய்யும் நிவேதனம் ப்ராணாஹுதிக்கு கூட போதாது. நீங்களோ டாக்டர்கள். ஒரு குழந்தைக்கு எவ்வளவு ஆகாரம், பெரியவர்களுக்கு எவ்வளவு ஆகாரம், வயதானவர்களுக்கு எவ்வளவு ஆகாரம் வேண்டும் என்று தெரியுமல்லவா? ஆகவே, நீங்கள் இருவரும், நாளை துவாதசி



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

அன்று, விதம் விதமான அன்னங்கள், பக்ஷணங்கள் எவ்வளவு சாப்பாடு போட முடியுமோ அவ்வளவு போட ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்.

அவர்களும், ஸ்ரீபெரியவாள் சொல்லியபடியே துவாதசி அன்று தைலக்காப்பு சாத்தி, புது ஜரிகை வஸ்திரம் சாத்தி, நிறைய மாலைகள் சாத்தி, பல அண்டாக்களில் விதம் விதமான அன்னங்கள் பக்ஷணங்கள் நிவேதனம் செய்து, தீபாராதனை செய்தார்கள். பிறகு, அந்த பிரசாதங்கள் எல்லோருக்கும் விநியோகம் செய்யப்பட்டது. தீபாராதனை முடிந்து, துளசி பிரசாதம் ஸ்ரீபெரியவாளிடம் கொண்டு வந்து, சமர்ப்பித்தார்கள். ஸ்ரீபெரியவாளுக்கு, மானஸீகமாக ஒரு சங்கல்பம் உருவாகும். அதற்கான, தகுந்த ஆசாமிகள் தானாகவே வருவார்கள். அவைகள், எந்த முன் ஏற்பாடுகளும் இல்லாமல், ஆனால், நிறைவாக நடந்து விடும். ஸ்ரீபெரியவாள் சத்ய சங்கல்பம் உடையவர் என்பதை, சொல்லவும் வேண்டுமோ?

(நிகழ்வுகள் தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com





PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- ஒரு வருட சந்தா மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission

* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.

| ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம் | |
|---|---|
| ஏகாதசி | ஜன 1, 16, 30 பிப் 15 |
| ஜன 1,2015 | **வைகுண்ட ஏகாதசி** - மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை விவேகானந்தா பள்ளி அம்பத்தூர் |
| ஜன 24 | வசந்த பஞ்சமி - ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் பிரதிஷ்டா தினம் |
| பிப் 17 | மஹாசிவராத்திரி - கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான் பிரதிஷ்டா தினம் |

**ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசியுடன் சத்சங்கம்**
**ஜனவரி 10 முதல் ஜனவரி 18வரை**
**இடம்: சென்னை ஆழ்வார்பேட்டை நாரத கான சபா**
**நேரம்: மாலை 6.30முதல் 8.30வரை**

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI